**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 92** **நாள்: 07.07.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வர்தா புயலால் சேதமடைந்த மரங்களை ஈடு செய்யும் வகையில் ரூ.5.29 கோடி செலவில் 23,000 புதிய மரங்கள் நடும் பணி துவங்கப்படவுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா. கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகரில் கடந்த 12.12.2016 அன்று வர்தா புயல் 120கி.மீ வேகத்தில் கரையைக் கடந்தது. இதனால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–1 முதல் 15 வரை உள்ள தெருக்கள் மற்றும் சாலைகளில் ஆயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால் பெருநகர சென்னை மாநகராட்சி பசுமைப் பரப்பளவு வெகுவாக குறைந்தது. இதனை ஈடு செய்யும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் கடந்த ஜனவரி மாதத்தில் நடந்த கூட்டத்தை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் தலைமையில் மரம் வளர்ப்பு வல்லுநர்களுடன் பல கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டது.

இதன்படி, சென்னை மாநகரில் நிழல் தரும் மரங்களை (Avenue Trees) விட நமது மண்ணுக்கேற்ற மரங்களை நட்டால் புயல் போன்ற இயற்கை சீற்றங்களை தாங்கக்கூடியதாகவும், வலுவானதாகவும், நீண்ட நாட்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் எனவும், சாலைகள் / தெருக்களின் அகலத்திற்கு ஏற்றாற்போல் மர வகைகளை நடலாம் என வல்லுநர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது.

மேலும், அனைத்து மண்டலங்களிலும் மண்ணின் தன்மை, கிடைக்கும் தண்ணீர் தரம் மற்றும் அளவு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு மரக்கன்றுகளை அந்தந்த இடத்திற்கு ஏற்றாற்போல் தேர்வு செய்து நடுவதற்கும் திட்டமிடப்பட்டது.

அதற்காக, தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL) மூலம் ஆலோசகர்களாக (Consultant) M/s. Care Earth Trust என்ற அமைப்பு, முறையாக நியமனம் செய்யப்பட்டு, மண்டல வாரியாக விரிவான களஆய்வு மேற்கொண்டு, பசுமை பரப்பளவை கண்டறிந்து, பசுமை பரப்பு குறைவாக உள்ள இடங்களில் மண்ணின் தன்மை, தட்பவெப்ப நிலை, நீரின் தரம் ஆகியவற்றை விரிவாக ஆய்வு செய்து அதற்கேற்ற மரவகைகளின் விவரங்களுடன் விரிவான திட்ட அறிக்கை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளித்துள்ளது. இந்த அறிக்கையின் அடிப்படையில் மரம் வளர்ப்பு வல்லுநர்கள், அமைப்பு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், வனத்துறை அதிகாரிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர்கள் பல்வேறு நிலைகளில் கூட்டங்கள் நடத்தி கலந்தாலோசிக்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டது.

அதனடிப்படையில், இந்த நிதியாண்டில் (2018–19) சுமார் 23,000 மரங்கள் நட்டு ஒரு ஆண்டு பராமரிக்க ஆகும் செலவின மதிப்பீட்டு தொகை ரூ.5.29 கோடிக்கு அரசின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மதிப்பீட்டு தொகையானது, தமிழ்நாடு அரசின் 2018–19ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மரங்கள் நடும் பணி 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்டு பருவ மழை காலத்திற்கு முன்னதாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கனவே, வர்தா புயல் தாக்கியதிலிருந்து இது வரை உள்ள காலத்தில் சென்னை மாநகரில் பல்வேறு சாலைகள், தெருக்கள் மற்றும் பூங்காக்களில் சுமார் 14,740 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி**